# உங்கள் குழந்தையால்
# எவ்வளவு நன்றாகக் காண முடியும்?

**அன்புள்ள ஜூனியர் மழலையர் பள்ளிக் குழந்தையின் பெற்றோருக்கு,**
இலவசமான குழந்தைப்பருவச் சுகாதார விழிப்புணர்வு திட்டமான Eye See...Eye Learn® திட்டத்தின் **மூலம் உங்களுடைய மழலையர் பள்ளி மாணவரை ஒரு விரிவான கண் பரிசோதனை செய்துகொள்ளச் செய்யுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள்**.

உங்கள் குழந்தை 2011-இல் பிறந்திருந்தால், அவன்/அவள் ஒரு பங்கேற்கின்ற பார்வைத்திறன் சோதனை மருத்துவரிடம் விரிவானக் கண் பரிசோதனைச் செய்துகொள்வதற்குத் தகுதி பெறுகிறான்/பெறுகிறாள். கண் பரிசோதனைக்கான செலவு உங்களுடைய குழந்தையின் சுகாதார அட்டையைக் கொண்டு ஈடுசெய்யப்படும். உங்கள் குழந்தைக்கு மூக்குக் கண்ணாடி பரிந்துரைக்கப்பட்டால், அவன்/அவள் Eye See...Eye Learn® திட்டத்தின் மூலம் ஜூலை 1, 2015 முதல் ஜூன் 30, 2016 வரை ஒரு பங்கேற்கின்ற பார்வைத்திறன் சோதனை மருத்துவரிடமிருந்து ஒரு இலவச மூக்குக் கண்ணாடியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவான்/பெறுவாள்.

**உண்மை:** 4 குழந்தைகளில் 1 குழந்தைக்கு கண்பார்வைப் பிரச்சனை உள்ளது. ஆனால் பெரும்பாலும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லத் துவங்குவதற்கு முன்னர் கண் பரிசோதனையைச் செய்து கொள்வதில்லை. மோசமான கண்பார்வைக் குறைபாட்டைக் கொண்டிருக்கும் குழந்தைகள் தங்களுடைய பணியின் மீது கவனம் செலுத்துவதில் சிரமத்தைக் கொண்டிருப்பார்கள். மேலும் அவர்கள் கற்றல் அல்லது நடத்தைப் பிரச்சனைகளைக் கொண்டிருப்பதாக தவறாகப் புரிந்து கொள்ளப்படுவார்கள்.

**உண்மை:** இளம் பிள்ளைகளுக்கு வழக்கமான கண் பார்வை எவ்வாறு இருக்கும் என்பது தெரியாது. மேலும் அது குறித்து அவர்கள் தங்களுடைய பெற்றோர்களிடம் எப்பொழுதாவது தெரிவிப்பார்கள். சிலர் பிரச்சனையைக் கொண்டிருப்பதற்கான எந்தவித அறிகுறியையும் ஒருபோதும் காண்பிக்க மாட்டார்கள்.

**உண்மை:** சில கண்பார்வை தொடர்பான பிரச்சனைகளை 7 வயதிற்கு முன்னர் கண்டறிந்து குணப்படுத்தவில்லை என்றால், அது உங்கள் குழந்தையின் கண்பார்வையை நிரந்தரமாக மங்கச் செய்து விடலாம்.

**உண்மை:** பார்வைத் தகுதி சரிபார்த்தல் என்பது ஒரு பார்வைத்திறன் சோதனை மருத்துவரால் வழங்கப்படும் ஒரு விரிவான கண் பரிசோதனை அல்ல மற்றும் அது பெரும்பாலும் குறிப்பிட்ட பார்வைத்திறன் பிரச்சனைகளைத் தவறவிட்டு விடலாம்.

உங்களுடைய குழந்தை முறையாகக் கல்வி கற்பதற்கும் வகுப்பறை மற்றும் மைதானத்தில் முழுவதுமாகப் பங்கேற்பதற்கு சிறந்த பார்வைத் திறன் அவசியமாகும். விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சிறந்த கண்பார்வை மிகவும் அவசியமாகும். மேலும் அது அவர்களை சமூகத்தில் கலந்து பழகுவதற்கும் சுய மதிப்பைக் கொண்டிருப்பதற்கும் உதவிட முடியும்.

**இத்திட்டம் அல்லது குழந்தைகளின் கண்பார்வை குறித்த மேலும் அதிகத் தகவல்களுக்குப் பார்வையிடவும்**

www.EyeSeeEyeLearn.ca | கட்டணமில்லா தொலைபேசி (855) 424-3735

பங்கேற்கின்ற கண் மருத்துவர்களின் பட்டியல் ஒன்றும் கிடைக்கப் பெறுகிறது

தகவல்களுக்குப் பார்வையிடவும்: www.EyeSeeEyeLearn.ca

மூக்குக்கண்ணாடிகளுக்கான பங்குதாரர்கள்: Nikon Lenswear® | OGI Eyewear
ஒன்ராறியோ மாகாண அரசால் பகுதியளவு நிதியுதவி அளிக்கப்படுகிறது